செ.வெ.எண்: 24 நாள்: 13.03.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**சட்டமன்ற தேர்தலில் வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிய உள்ள அலுவலர்களுக்கு கணினி மூலம் குலுக்கல் முறையில் முதற்கட்ட ஓதுக்கீடு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர் மற்றும் குன்னம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ள அலுவலர்களுக்கு கணினியின் மூலம் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.03.2021) மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.

**இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்:**

அதன்படி, 147.பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 428 வாக்குச்சாவடி மையங்களுக்கு (Polling Station) 20 சதவீத இருப்புடன் 514 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும் (Proceeding Officer), 514 வாக்குப்பதிவு நிலை-1 அலுவலர்களும் (Polling Officer-1), 514 வாக்குப்பதிவு நிலை-2 அலுவலர்களும் (Polling Officer-2), 514 வாக்குப்பதிவு நிலை-3 அலுவலர்களும் (Polling Officer-3) என மொத்தம் 2,056 அலுவலர்கள் பணியாற்றவுள்ளனர்.

148.குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 388 வாக்குச்சாவடி மையங்களுக்கு 20 சதவீத இருப்புடன் 466 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், 466 வாக்குப்பதிவு நிலை-1 அலுவலர்களும், 466 வாக்குப்பதிவு நிலை-2 அலுவலர்களும், 466 வாக்குப்பதிவு நிலை-3 அலுவலர்களும் என மொத்தம் 1,864 அலுவலர்கள் பணியாற்றவுள்ளனர்.

ஆக மொத்தம் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 816 வாக்குச்சாவடி மையங்களுக்கு 20 சதவீத இருப்புடன் 980 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், 980 வாக்குப்பதிவு நிலை-1 அலுவலர்கள், 980 வாக்குப்பதிவு நிலை-2 அலுவலர்களும், 980 வாக்குப்பதிவு நிலை-3 அலுவலர்களும், என மொத்தம் 3,920 அலுவலர்கள் பணியாற்றவுள்ளனர்.

சட்டமன்ற தொகுதி வாரியாக அலுவலர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்தல் தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, கணினி மூலம் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதியில் முதற்கட்ட பயிற்சி வகுப்பு 17.03.2021 அன்று நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் போது, மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் /மாவட்ட வருவாய் அலுவலர் திரு.செ.ராஜேந்திரன், குன்னம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.எஸ்.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**